# தமிழ்ச்சங்கம்- பேராதனைப் பல்கலைக்கழகம்

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு 2020**

**கத்தோலிக்க திருமறை**

| 14 | T | I, II |
|---|---|---|

**நேரம்: 3.00 மணித்தியாலம்**


**தொகுப்பு:**
**எ. மேசி விக்டோரியா**
**சமூகவியல் துறை**
**இரண்டாம் வருடம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**


**பகுதி I**

**<u>கவனிக்க:</u>**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. இயற்கைக்குரிய உடல் ஆவிக்குரிய உடல் என்பன பற்றித் தூய பவுல் அறிவுரை வழங்கியது,
   (1) திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்தில்
   (2) கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில்
   (3) தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில்
   (4) எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில்

2. பழைய ஏற்பாட்டில் உள்ளடக்கப்படுபவை,
   (1) மீட்பின் வரலாறு
   (2) சட்டக்கோவை
   (3) இறைவாக்கினரின் அழைப்பு
   (4) திருச்சபை பாரம்பரியம்

3. “நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்” எனக் கூறியவர்,
   (1) தூய யோவான்
   (2) தூய தோமா
   (3) தூய பவுல்
   (4) தூய பேதுரு

4. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட இலக்கிய நூல்களுள் தற்காலத்தில் பயன்படுவது,
   (1) தேவ வேத புராணம்
   (2) வேத காவியம்
   (3) ஞான இலக்கியம்
   (4) வியாகுல பிரசங்கம்

5. ஏகாந்திகள் அல்லது வனத்துப்பிதாக்கள் என அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர்,
   (1) தேப்ஸ் சின்னப்பர்
   (2) ஏகிப்து தூய அந்தோனியார்
   (3) தூய ஆசிர்வாதப்பர்
   (4) தூய பசில்


தமிழ்ச்சங்கம் -பேராதனைப் பல்கலைக்கழகம்
Education கல்வி அධ්‍යාපන

6. திருப்பலியின் இறுதி ஆசீரினால் எம்மை வழியனுப்பி வைப்பது,
   (1) கிறிஸ்தவ குடும்பத்திற்காகும்.
   (2) மறைப் பாடசாலைக்காகும்.
   (3) மறைப்பரப்புச் செயற்பாட்டிற்காகும்.
   (4) பங்கேற்கும் சமூகத்திற்காகும்.

7. 1543 இல் இந்நாட்டுக்கு வருகைத்தந்த முதல் மறைப் போதகக் குழுவினர்,
   (1) அகுஸ்தினார் சபையினர்
   (2) பிரான்ஸிஸ்கன் சபையினர்
   (3) டொமினிக்கன் சபையினர்
   (4) இயேசு சபையினர்

8. இறைவனுடனும் திருச்சபையுடனும் முறிந்த உறவை மீண்டும் கட்டியெழுப்பும் அருளடையாளமாவது,
   (1) ஒப்புரவு
   (2) திவ்யநற்கருணை
   (3) திருமுழுக்கு
   (4) உறுதிப்பூசுதல்

9. "குரோசிங் த திரஷ்கோல்ட் ஒப் ஹோப்" எனும் சுற்றுமடலை எழுதியவர்,
   (1) அருட்பணி மைக்கல் ரொட்றிக்கோ அடிகளார்
   (2) தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்
   (3) திருத்தந்தை பிரான்சிஸ்
   (4) தூய அன்னைத்தெரேசா

10. தூய யோசேவாஸ் அடிகளார் சேர்ந்த துறவற சபை எது?
   (1) ஆசிர்வாதப்பர் சபை
   (2) டொமினிக்கன் சபை
   (3) பிரான்ஸிஸ்கன் சபை
   (4) ஒரத்தோரியன் சபை

11. முதல் முறையாக அப்பமும் இரசமும் கொண்டு வந்து கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தவர்,
   (1) ஏலி
   (2) ஆபிரகாம்
   (3) ஆரோன்
   (4) மெல்கிசதேக்

கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 12 – 15 வினாக்களுக்கு விடை தருக.

A. தூய பேதுரு
B. தூய ஸ்தேவான்
C. தூய யாக்கோபு
D. தூய லூக்கா

12. திருத்தொண்டராக மட்டுமல்லாமல் நற்செய்தியையும் போதித்தவர்,
   (1) A (2) B (3) C (4) D

தமிழ்ச்சங்கம் போராதனைப் பல்கலைக்கழகம்
Education கல்வி අධ්‍යාපන

13. தூய சந்தியாகு என அழைக்கப்பட்ட திருத்தூதர்,
(1) A (2) B (3) C (4) D

14. தூய பவுல் தமது இரண்டாவது தூதுரைப் பயணத்தை ஆரம்பித்த பின்னர், இடையில் அவருடன் இணைந்துக் கொண்டவர்
(1) A (2) B (3) C (4) D

15. இயேசுவினால் நேரடியாக அழைக்கப்பட்ட திருத்தூதர்களில் அடங்குபவர்கள்.
(1) A, B (2) A,D (3) A,C (4) B,C

16. புகழ்ச்சிக்குரிய வாழ்த்துக்கள் மூன்றும், ஆன்மீக தேவைகளை அடிப்படையாக கொண்ட வேண்டுதல்கள் நான்கும் அடங்கியுள்ள செபம் எது?
(1) மூவேளைச் செபம்
(2) இயேசு கற்பித்த செபம்
(3) நற்கருணை மன்றாட்டு
(4) உன்னத குருவின் செபம்

17. கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்புக்காக செபிக்கும் வாரமாக அமைவது,
(1) ஜனவரி 18 – 25 (2) ஜனவரி 15 – 22
(3) ஜனவரி 6 – 11 (4) ஜனவரி 16 – 23

18. இஸ்ரயேல் பாரம்பரியமாக கொண்டிருந்த இறை நம்பிக்கை, அனுபவங்களின் அடிப்படையிலே திருவிவிலியத்தில் உருவாகிய புத்தகத் தொகுதி,
(1) ஞான நூல்கள் (2) பஞ்சாகமம்
(3) வரலாற்று நூல்கள் (4) இறைவாக்கினர் நூல்கள்

19. நற்செய்தியாளர்கள் நால்வரும் குறிப்பிடும் ஒரே ஒரு அருங்குறி,
(1) அப்பங்களை பலுகச் செய்தமை (2) இலாசரை உயிர்ப்பித்தமை
(3) முடக்குவாதமுற்றவரை குணமாக்கியமை (4) கைசூம்பியவரை குணமாக்கியமை

20. தூய பேதுருவின் மொழிப்பெயர்ப்பாளராக இருந்தவர்,
(1) புனித மாற்கு (2) புனித மத்தேயு (3) புனித லூக்கா (4) புனித யோவான்

21. குருக்களின் கடமைகள் பற்றிக் கூறும் திருச்சபையில் ஆயர்களின் அருள்பணி பற்றிய விழித்தொகுப்பு வெளியிடப்பட்டது,
(1) எருசலேம் பொதுச்சங்கத்தில் (2)திரிதெந்தின் பொதுச்சங்கத்தில்
(2) இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் (4)முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில்

22. ''பெசிலியா'' எனும் கிரேக்க சொல்லுக்கு சமமான மூன்று சொற்களாவன,
(1) ஆட்சி, மீட்பு, முடிவில்லா வாழ்வு (2) அரச வம்சம், அரசு, ஆட்சி
(3) அரசு, ஆட்சி, முடிவில்லா வாழ்வு (4) அரச வம்சம், மீட்பு, இறைசித்தம்

23. இருள் நிறையுமிடத்தில் அருள் ஒளியையும், கவலை வாட்டும் இடத்தில் மனமகிழ்வையும் கொண்டு செல்ல வரம் கேட்டு செபித்தவர்,
(1) தூய பிரான்ஸிஸ் அசீசியார் (2) தூய அகுஸ்தினார்
(3) தூய வனத்து அந்தோனியார் (4) அசீசியில் தூய கிளாரா

தமிழ்த்தினம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
Education கல்வி அධ්‍යාපන

24. தொடக்க நூலில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனக் குறிப்பிடப்படும் அதிகாரங்கள் எவை?
(1) தொடக்க நூல் 1 – 11
(2) தொடக்க நூல் 1 – 10
(3) தொடக்க நூல் 12 – 50
(4) தொடக்க நூல் 1 – 12

25. திருவருகைக் காலத்திலும், நத்தார் காலத்திலும் திருவழிப்பாட்டு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் நிறங்கள் ஒழுங்கு முறையே,
(1) பச்சை, ஊதா
(2) ஊதா, வெள்ளை
(2) வெள்ளை, பச்சை
(4) வெள்ளை, ஊதா

26. "இருக்கின்றவர் நாமே" என்ற பெயரால் இறைவன் யாருக்கு தன்னை அறிமுகம் செய்தார்?
(1) பாபிலோனியாவில் வாழ்ந்த எபிரேய மக்களுக்கு
(2) எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு
(3) இஸ்ரயேல் நாட்டில் அடிமைப்பட்டிருந்த யூத மக்களுக்கு
(4) எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த எகிப்திய மக்களுக்கு

27. சீனாய் உடன்படிக்கையின் மூலம் இஸ்ரயேல் மக்களுக்கு கிடைத்த அந்தஸ்து யாது?
(1) குருத்துவ, அரச, தூய மக்களாகினர்.
(2) இறைவனை துதிக்கும் பேறுபெற்றனர்.
(3) இறைவனின் அன்புச் சகோதர்களாயினர்.
(4) இறைவனுக்கு பலியிடும் உரிமையைப் பெற்றனர்.

28. "மனிதன் இவ்வுலகிலும் மறு உலகிலும் மகிழ்ச்சியாக வாழ்வதே இறைவனுக்கு மகிமை" என்று கூறியவர்?
(1) புனித அகுஸ்தினார்
(2) புனித இரனியுஸ்
(3) புனித டின்டேல்
(4) புனித சிறில்

29. இயேசு தோற்றம் மாறிய போது நடந்த உரையாடலின் சாரம்சம்,
(1) ஏலியாவின் இறைவாக்குகளை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும்.
(2) இயேசு எருசலேமில் நிறைவேற்றவிருக்கும் வாழ்க்கைப் பலியைப் பற்றியதாகும்.
(3) இறைவனின் நீதிச்சட்டங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதாகும்.
(4) இயேசு இறைமகன் என்பதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதாகும்.

30. பொது நிலையினரின் பொதுச் சங்கம் என்று அழைக்கப்படுவது,
(1) திரித்தெந்தின் சங்கம்
(2) அனைத்துலகோர் சங்கம்
(3) 2ஆம் வத்திக்கான் சங்கம்
(4) லேவியர் சங்கம்

31. புதிய ஏற்பாட்டில் பெந்தகோஸ்தே நிகழ்வு பழைய ஏற்பாட்டில் எந்நிகழ்வோடு ஒப்பிடப்படுகின்றது?
(1) செங்கடலைக் கடத்தல்
(2) பாலைவனப் பயணம்
(3) சீனாய் உடன்படிக்கை
(4) பாபேல் கோபுர நிகழ்வு

32. முதலாவது பேதுருவின் உரையில் எந்த இறைவாக்கினரை குறிப்பிடுகின்றார்?
(1) எரேமியா (2) யோவேல் (3) எசாயா (4) எசேக்கியேல்

33. முதலாவது வேதசாட்சியாக மரித்தவர் யார்?
(1) ஸ்தேவான் (2) பவுல் (3) பேதுரு (4) ஆமோஸ்

தமிழ்ச் சங்கம் - கொழும்பு பல்கலைக்கழகம்

34. கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை என பெயர் பெற்றவர்?
(1) 6 ம் சின்னப்பர் (2) 23 ம் யோவான் (3) 1ம் பிரான்சிஸ் (4) 10ம் பத்தினாதர்

35. ஒல்லாந்தர் இலங்கையில் கத்தோலிக்கரை துன்புறுத்தியமைக்கான இரண்டு பிரதான காரணங்கள்,

A. கத்தோலிக்கர் கல்வினிஸ்ட் டச்சு மதத்தை ஏற்றுக் கொண்டமை.
B. கத்தோலிக்கர் போர்த்துக்கேயருக்கு பிமைாணிக்கமாய் இருப்பார்களென்று பயந்தமை.
C. ஐரோப்பாவில் கத்தோலிக்கருக்கும், ஒல்லாந்தருக்கும் இடையில் காணப்பட்ட சர்ச்சை.
D. போர்த்துக்கேயர் ஒல்லாந்தருக்கு எப்பொழுதும் பரம விரோதிகளாக காணப்பட்டமை.

(1) A யும் D யும் (2) B யும் D யும் (3) B யும் C யும் (4) D யும் E யும்

36. முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரின் உன்னதமான இரக்கச்செயல்,
(1) நோய்வாய்ப்பட்டவரை பராமரித்தமை.
(2) அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவரை பராமரித்தமை.
(3) கத்தோலிக்கரை தேடிச் சென்றமை.
(4) புலனை எதிர்பார்க்காமல் பணியாற்றியமை.

37. புனித பவுலின் மனமாற்றத்தினை தோற்றுவித்த சம்பவம் நிகழ்ந்தது, அவர்
(1) ஏருசலேம் சென்றுக் கொண்டிருந்த போது
(2) அந்தியோக்கியா சென்றுக் கொண்டிருந்த போது
(3) தமஸ்கு சென்றுக் கொண்டிருந்த போது
(4) ஜெரிக்கோவிற்கு சென்றுக் கொண்டிருந்த போது

38. துறவற வாழ்வின் மூன்று வார்த்தைப்பாடுகள்
(1) கீழ்ப்படிவு, கற்பு, ஏழ்மை (2) ஏழ்மை, கற்பு, தாழ்ச்சி
(3) கீழ்ப்படிவு, தாழ்ச்சி, ஏழ்மை (4) தாழ்ச்சி, கற்பு, கீழ்ப்படிவு

39. கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளோடு இணைவதால் நாம் பெறும் பேறு,
(1) இவ்வுலகில் நம்மை வாழ வைக்கிறது.
(2) வாழ்க்கைப் பிரச்சினைகள் குறைகின்றது.
(3) வாழ்க்கையை இலகுவாக வாழ முடிகிறது.
(4) விண்ணுலக செல்வங்களின்பால் நம்மை வழிநடத்துகின்றது.

40. கார்லோ அக்யூடிஸ் அடிகளார் முத்திப்பேறுப்பெற்ற நிலைக்கு எப்போது உயர்த்தப்பட்டார்?
(1) 2020ஆம் ஆண்டு அக்டோபர் 10 (2) 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் 10
(3) 2020ஆம் ஆண்டு அக்டோபர் 15 (4) 2020ஆம் ஆண்டு அக்டோபர் 01

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

## பகுதி II

**கவனிக்க:**

**முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. (1) இயேசு தமது சீடர்களுக்கு கற்றுக்கொடுத்த செபத்தில் நாம் செபிக்க வேண்டிய முறை அடங்கியுள்ளது என்பதற்கு மூன்று உதாரணங்கள் தருக
(2) இறைவாக்கினருக்கு அளிக்கப்பட்ட செயற்பாடுகளில் மூன்று பிரதான பிரிவுகளும் எவை?
(3) திருவழிப்பாட்டின் முக்கிய பகுதிகள் எவை?
(4) எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்களின் இருவகைகளும் எவை?
(5) ஐந்நூல் எந்த இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது?
(6) பழைய ஏற்பாட்டின் படி பலி செலுத்துவதன் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
(7) இயேசு இறை ஆட்சியின் மதிப்பீடுகள் பற்றிக் கற்பித்த உவமைகள் இரண்டைக் குறிப்பிடுக?
(8) பவுலின் இரண்டாம் பயணத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் நான்கு தருக.
(9) இறைவன் ஆபிரகாமோடு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையில் அடங்கும் பிரதான விடயங்கள் இரண்டும் எவை?
(10)நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டிய செயல்கள் இரண்டு தருக.

02. (1) மறைத்தூதுரைப் பயணங்களில் தூய பவுலுக்கு முகங்கொடுக்க நேர்ந்த சவால்கள் மூன்று தருக.
(2) அன்பு செய்வது பற்றி இயேசு கூறும் நல்விழுமியங்களை லூக்கா நற்செய்தியிலிருந்து தருக.
(3) திருமுழுக்கின் மூலம் கிடைக்கும் இறை அருளை, கிறிஸ்தவ மாணவராக நீர் எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர் என்பதை ஐந்து விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

03. (1) இயேசு செபக் கூடத்தில் வாசித்த எசாயாவின் ஏட்டுச் சுருளில் அடங்கியிருந்த விடயங்கள் எவை?
(2) திருமணம் தொடர்பாகத் திருவிவிலியத்தில் தொடக்க நூலில் குறிப்பிடப்படும் படிப்பினைகள் இரண்டு தருக.
(3) ‘‘மனித அபிமானத்தையும் தூய்மையையும் வளர்த்துக்கொள்ள’’ உம்மால் செய்யக் கூடிய நற்செயல்கள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக.

04. (1) மெசியா பற்றிய மனநிலையில் அடங்கியுள்ள விடயங்கள் மூன்றும் எவை?
(2) துன்புறும் ஊழியன் வழியாக எடுத்துக்காட்டப்படும் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
(3) ஒப்புரவு அருளடையாளத்தை பெறப் பின்வாங்கும் உமது நண்பன் ஒருவனுக்கு அதன் மேன்மையை உதாரணங்கள் ஐந்தின் மூலம் விளக்குக.

05. (1) இஸ்ரயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அரசன் மேற்கொண்ட செயற்பாடுகள் மூன்றும் எவை?
(2) வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகளைக் குறிப்பிடுக.
(3) திருமுழுக்கைப் பற்றி கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளை குறிப்பிட்டு விளக்குக.

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

06. (1) மனிதன் தனிமையடைந்து உறுதியற்ற நிலைக்குத் தள்ளப்படக் காரணங்கள் இரண்டு தருக.

(2) ஞாயிறு திருப்பலியில் கருத்துள்ள முறையிலும் உயிர்ப்பாகவும் பங்குப்பற்ற நீர் மேற்கொள்ளும் படிமுறைகளைக் குறிப்பிடுக.

(3) தூய யோசப்வாஸ் அடிகளாரின் பணியின் மூலம் எமது வாழ்க்கைக்கு கற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் ஐந்தினை விளக்குக.

07. பின்வரும் தலைப்புகளில் இரண்டைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

(1) இறையரசைப் பற்றிய படிப்பினை (மத்தேயு 5:6-7)

(2) இறை இரக்கத்தின் ஆண்டு

(3) வார்த்தைப்பாடுகளும் நேர்த்தியும்

(4) பொதுநிலையினர் மறைத் தூதுப் பணி

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

Education
கல்வி
අධ්‍යාපන
தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page